நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம் : தொடக்கநிலை

**December 2006**

வினாக்கள் : 40

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

ஆசிரியர் வாசிப்பதற்கான நேரம் : 15 நிமிடங்கள்

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

- முழு வினாத்தாளும் முதல் 15 நிமிடங்களில் **மட்டுமே** வாசிக்கப்பட வேண்டும்.
- வாசித்த பின்னர் வேறு உதவிகள் வழங்கப்படக் கூடாது.
- வாசிக்கப்படும் நேரத்தில் மாணவர்கள் வினாத்தாளிலோ அல்லது விடைத்தாளிலோ எந்த விதமான அடையாளங்களையும் இடக்கூடாது.

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.

1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லை (சொற்களை) தெரிவுசெய்க.



1. இந்த மனிதர்

(a) மழையில் நனைகிறார்.
(b) நாயை அணைக்கிறார்.
(c) குடை பிடிக்கிறார்.
(d) குடையை மூடுகிறார்.



2. இந்த விளையாட்டு வீரர்

(a) ஓடியாடுகிறார்.
(b) கால் பந்து விளையாடுகிறார்.
(c) ஓட்டப்போட்டியில் பங்குபற்றுகிறார்.
(d) வலைப்பந்து விளையாடுகிறார்.

3. இவர்

(a) வீடு கட்டுகிறார்.
(b) வீட்டை இடிக்கிறார்.
(c) கல் அடுக்கி விளையாடுகிறார்.
(d) வீட்டுக் கூரையில் ஏறுகிறார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Read the Poem “பாப்பா பாட்டு” and answer the questions 4 to 7.
“பாப்பா பாட்டு” என்ற பாடலை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 4 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## பாப்பா பாட்டு

பாலைப் பொழிந்து தரும் பாப்பா – என்றும்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைந்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா

பொய் சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
புறஞ்சொல்லல் ஆகாது பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா

- மகாகவி பாரதி

| | |
|---|---|
| 4. பாலைப் பொழிந்து தருவது எது?<br>(a) தோழன்<br>(b) நாய்<br>(c) பசு<br>(d) பாப்பா | 5. பாட்டில் சொல்லப்படும் மனிதனுக்கு தோழன்:<br>(a) தெய்வம்<br>(b) நாய்<br>(c) மனிதன்<br>(d) பசு |
| 6. பாடலில் வரும் துணை என்ற சொல்லின் கருத்து என்ன?<br>(a) தெய்வம்<br>(b) நன்மை<br>(c) பாதுகாப்பு<br>(d) தீமை | 7. இந்த உலகில் உள்ள உயிர்களிடம் எப்படி இருக்க வேண்டும் என்று பாரதி பாடலில் சொல்கிறார்?<br>(a) அன்பாக இருக்க வேண்டும்.<br>(b) தோழனாக இருக்க வேண்டும்.<br>(c) துணையாக இருக்க வேண்டும்.<br>(d) பொய் சொல்லாமல் இருக்க வேண்டும். |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 8 and 9 choose the word that is spelt incorrectly in the given sentence.
8 ஆம், 9ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்திலே பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லினைக் காட்டுக.

8. நானும் தம்பியும் ஒளித்து விழையாடினோம்.

(a) நானும்
(b) தம்பியும்
(c) ஒளித்து
(d) விழையாடினோம்

9. வாணி புத்தகத்தைப் பார்த்து படம் வறைந்தாள்.

(a) புத்தகத்தைப்
(b) பார்த்து
(c) படம்
(d) வறைந்தாள்

For questions 10 and 11 choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.
10ஆம், 11ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?

10. நாங்கள் <u>சாணிக்கிழமை</u> தமிழ்ப் பாடசாலைக்குப் போனோம்.

(a) சனிக்கிளமை
(b) சணிக்கிழமை
(c) சனிக்கிழமை
(d) சனிக்கிலமை

11. எனது பிறந்ததினத்துக்கு <u>நன்பர்கள்</u> வாழ்த்துச் சொன்னார்கள்.

(a) நன்பர்கல்
(b) நண்பர்கல்
(c) நன்பகல்
(d) நண்பர்கள்

Look at the picture carefully and answer questions 12 to 13.
படத்தைக் கவனமாகப் பார்த்து 12 முதல் 13 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.



| 12. எது சரி? | 13. எது சரி? |
|---|---|
| (a) மனிதன் யானையின் கீழ் இருக்கிறான்.<br>(b) மனிதன் யானைக்கருகில் இருக்கிறான்.<br>(c) மனிதன் யானையின் மேல் இருக்கிறான்.<br>(d) மனிதன் யானையின் முன் இருக்கிறான். | (a) யானைக்குப் பின்னால் குட்டி செல்கிறது.<br>(b) யானைக்கு பக்கத்தில் குட்டி செல்கிறது.<br>(c) யானைக்கு கீழே குட்டி செல்கிறது.<br>(d) யானைக்கு முன்னால் குட்டி செல்கிறது. |

Look at the picture carefully and answer questions 14 to 15.
படத்தைக் கவனமாகப் பார்த்து 14 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.



14. எது சரி?
(a) கழுதை பையனால் சுமக்கிறது.
(b) கழுதை பையனைச் சுமக்கிறது.
(c) கழுதை பையனோடு சுமக்கிறது.
(d) கழுதையை பையன் சுமக்கிறான்.



15. எது சரி?
(a) ஓடம் தண்ணீரின் கீழ் செல்கிறது.
(b) ஓடம் தண்ணீரால் செல்கிறது.
(c) ஓடம் தண்ணீருடன் செல்கிறது.
(d) ஓடம் தண்ணீரில் செல்கிறது.

For questions 16 to 18 choose the best word for each space.
16 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

16. மேற்கில் சூரியன் ______________________________ .
(a) மின்னும்
(b) மறையும்
(c) மங்கும்
(d) உதிக்கும்

17. குயில் கூவும். அது போல் காகம் ______________________________ .
(a) அலறும்
(b) கதறும்
(c) கரையும்
(d) அகவும்

18. தை, மாசி, வைகாசி, என்பன ______________________________ .
(a) மாதங்கள்
(b) வருடங்கள்
(c) விரதங்கள்
(d) நாட்கள்

For questions 19 to 21 choose the word that has the closest meaning to the underlined word(s).
19 முதல் 21 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு மிகப் பொருத்தமான சொல்லை காட்டுக.

| | |
|---|---|
| 19. நான் பசி தீர உண்டேன்.<br><br>(a) படுத்தேன்<br>(b) உடுத்தேன்<br>(c) சாப்பிட்டேன்<br>(d) குடித்தேன் | 20. மோட்டார் வாகனம் வேகமாக வந்தது.<br><br>(a) விரைவாக<br>(b) அதிகமாக<br>(c) பறந்து<br>(d) மெதுவாக |
| 21. கலா தெருவில் உள்ள கல்லை எடுத்து ஓரமாக போட்டாள்.<br><br>(a) மைதானத்தில்<br>(b) வீட்டில்<br>(c) நடுவில்<br>(d) வீதியில் | |

For questions 22 to 24 choose the word that is opposite in meaning to the underlined word.
22 முதல் 24 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லைக் காட்டுக.

22. எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு பாடசாலை உள்ளது.

(a) நடுவில்
(b) தொலைவில்
(c) பக்கத்தில்
(d) இடையில்

23. கமலாவின் பந்து பள்ளத்தில் விழுந்து விட்டது.

(a) கூரையில்
(b) குழியில்
(c) மேட்டில்
(d) தண்ணீரில்

24. கண்ணன் பாடசாலையில் இருந்து மகிழ்ச்சியாக வீடு திரும்பினான்.

(a) சந்தோஷமாக
(b) சோகமாக
(c) மேன்மையாக
(d) பெரிதாக

Read and understand the text "**சாடியில் செடி வளர்த்தல்**" and answer the questions 25 to 28.
"**சாடியில் செடி வளர்த்தல்**" பற்றிய குறிப்புகளை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 25 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# சாடியில் செடி வளர்த்தல்

**தேவையான பொருட்கள் :**

1. மண்
2. பசளை
3. சாடி – Pot
4. விதை – Seed
5. பூவாளி – Watering Can
6. தண்ணீர்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வழிமுறை :**

| | |
|---|---|
| 1. சாடியில் மண்ணையும் பசளையையும் கலந்து போடுங்கள். |  |
| 2. மண்ணில் சிறு குழி போல் தோண்டி விதையை இடுங்கள். |  |
| 3. விதையை மண்ணால் மூடுங்கள். |  |
| 4. சாடியை சூரிய வெளிச்சம் படும்படி வைத்து ஒவ்வொரு நாளும் தண்ணீர் ஊற்றுங்கள். |  |
| 5. செடியை நத்தை, பூச்சி போன்றவற்றில் இருந்து கவனமாக பாதுகாத்து வாருங்கள். |  |
| 6. செடி வளர்ந்தவுடன் அதில் இருந்து இலை, பூ, காய், கனி போன்றவற்றைப் பலனாகப் பெறுங்கள். |  |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Choose the most appropriate answer.
மிகப் பொருத்தமான விடையை தேர்ந்தெடுக்கவும்.

25. மண்ணோடு எதை கலக்க வேண்டும்?
   (a) குழியை
   (b) செடியை
   (c) வெளிச்சத்தை
   (d) பசளையை

26. செடி வளர அவசியமானவை எவை?
   (a) சாடி, மண், குழி
   (b) பசளை, வெளிச்சம், தண்ணீர்
   (c) மண், பசளை, நத்தை
   (d) விதை, பூச்சி, தண்ணீர்

27. செடி வளர்ப்பதால் கிடைக்கும் பலன்:
   (a) இலை, பூ, காய், கனி
   (b) சாடி, பூ, கனி, பசளை
   (c) மண், காய், கனி, பூச்சி
   (d) தண்ணீர், இலை, பூ, சாடி

28. செடியை எதில் இருந்து பாதுகாக்க வேண்டும்?
   (a) சூரியனில்
   (b) தண்ணீரில்
   (c) நத்தையில்
   (d) சாடியில்

For questions 29 to 32 choose the response that combines the sentences in the best way.
29 முதல் 32 வரையான வினாக்களில் தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.

29. கண்ணன்
   (1) கடவுளை வணங்கினான்.
   (2) பல்துலக்கி முகம் கழுவினான்.
   (3) காலைச் சாப்பாடு சாப்பிட்டான்.
   (4) நித்திரை விட்டு எழுந்தான்.

   (a) (3), (4), (2), (1)    (b) (2), (4), (1), (3)
   (c) (3), (1), (4), (2)    (d) (4), (2), (1), (3)

30. மாமா
   (1) பயணச்சீட்டை அதிகாரியிடம் காட்டினார்.
   (2) பின்னர், வீடு வந்து சேர்ந்தார்.
   (3) புகையிரதத்தில் இருந்து இறங்கினார்.
   (4) மோட்டார் வாகனத்தை நோக்கி நடந்தார்.

   (a) (2), (1), (3), (4)    (b) (3), (1), (4),( 2)
   (c) (3), (2), (1), (4)    (d) (4), (3), (1), (2)

அடுத்த பக்கத்தில் தொடரும்.

31. நாங்கள்
   (1) சித்தப்பாவின் மகனிற்கு பிறந்தநாள் பரிசைக் கொடுத்தோம்.
   (2) அந்த பொருளை ஒரு பளபளப்பான தாளில் சுற்றினோம்.
   (3) கடையில் ஒரு விளையாட்டுப் பொருள் வாங்கினோம்.
   (4) அதன் பின்னர் சித்தப்பா வீட்டிற்குச் சென்றோம்.

(a) (3), (2), (4), (1)    (b) (4), (2), (3), (1)
(c) (3), (4), (1), (2)    (d) (2), (3), (1), (4)

32. நான்
   (1) ஈரத்தை துடைத்து ஆடை அணிந்தேன்.
   (2) பின்பு "போய் வருகிறேன்" என்று சொல்லி புறப்பட்டேன்.
   (3) குளியல் அறையில் நுழைந்து குளித்தேன்.
   (4) வாசலுக்கு அருகே வந்து சப்பாத்து அணிந்தேன்.

(a) (1), (2), (3), (4)    (b) (2), (4), (1), (3)
(c) (3), (1), (4), (2)    (d) (1), (3), (2), (4)

## For questions 33 to 36 choose the correct word to complete the sentence.
## 33 முதல் 36 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வசனத்தை நிறைவு செய்க.

33. நாளை காலை நான் பிரபுவை ________________ என கண்ணன் கூறினான்.
   (a) சந்தித்தேன்
   (b) சந்தித்தோன்
   (c) சந்திப்பேன்
   (d) சந்தித்தோம்

34. நேற்று மழை பெய்தது. இன்றும் __________________ போல இருக்கிறது.
   (a) பெய்யாது
   (b) பெய்யும்
   (c) பெய்யவில்லை
   (d) பெய்கிறேன்

35. நேற்று அம்மாவும் தம்பியும் கடைக்குப் ___________________ .
   (a) போவார்கள்
   (b) போகிறார்கள்
   (c) போகிறோம்
   (d) போனார்கள்

36. கூட்டைத் திறந்து விட்டேன். கிளி வெளியே ___________________ .
   (a) பறந்தது
   (b) பறக்கின்றது
   (c) பறக்கும்
   (d) பறந்தன

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Read the text "**அம்மாவின் பிறந்தநாள்**" and answer questions 37 to 40.
"**அம்மாவின் பிறந்தநாள்**" என்பதை வாசித்து 37 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## அம்மாவின் பிறந்தநாள்

சென்ற வாரம் எங்கள் அம்மாவுக்கு பிறந்தநாள். நானும் என் தங்கையும் அவருக்கு ஒரு பரிசு அளிக்க விரும்பினோம். பரிசு (அன்பளிப்பு) வாங்குவதற்காக நாங்கள் பணம் சேமித்தோம். நாங்கள் பணம் சேமித்தது எங்கள் தாயாருக்கு தெரியாது.

தாயாரின் பிறந்த நாள் அன்று நாங்கள் இருவரும் கடைக்குச் சென்றோம். நாங்கள் என்ன பரிசு வாங்கலாம் என்று யோசித்தோம். கடைசியில் ஒரு கைப்பை வாங்க முடிவு செய்தோம். அதன் விலை பத்து வெள்ளி. நாங்கள் அதை வாங்கினோம். கடைக்காரர் அதை ஒரு வண்ணத்தாளில் சுற்றிக் கொடுத்தார். நாங்கள் அதை வீட்டுக்குக் கொண்டு வந்தோம்.

நானும் என் தங்கையும் எங்கள் அம்மாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கூறினோம். பரிசை அவரிடம் கொடுத்தோம். எங்கள் தாயார் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

37. அம்மாவுக்கு எப்போது பிறந்தநாள்?

(a) சென்ற மாதம்
(b) இன்று
(c) சென்ற வாரம்
(d) நேற்று

38. அன்பளிப்பு வாங்க எவ்வாறு பணம் கிடைத்தது?

(a) அப்பா பணம் கொடுத்தார்
(b) பணத்தை சேமித்தார்கள்
(c) அம்மா பணம் கொடுத்தார்
(d) கடைக்காரர் பணம் கொடுத்தார்

39. அம்மாவுக்கு வாங்கிய கைப்பையின் விலை என்ன?

(a) ஐந்து வெள்ளி
(b) பத்து வெள்ளி
(c) இருபது வெள்ளி
(d) ஐம்பது வெள்ளி

40. பிறந்தநாள் வாழ்த்துக் கூறி அன்பளிப்பு வழங்கிய போது அம்மா ____________ அடைந்தார்.

(a) பெருமை
(b) சிறுமை
(c) மகிழ்ச்சி
(d) கோபம்